குறைந்த ஒப்பம் அளித்த திருவாளர்கள். நவீன பொறியாளர்கள் கட்டுமான கூட்டுறவு சங்கம் அவர்களுடன் 03.06.2008 அன்று பேச்சு வார்த்தை நடத்தப்பட்டது. இந்த பேச்சு வார்த்தையில் அவர்கள் தங்களது பிறகு ஒப்பத்தொகை சதவிகிதத்தை +)35.00% என்று குறைத்துக்கொண்டனர். இதன்படி அவர்களின் ஒப்பத்தொகை ரூ.45,17,861/– ஆகும்.

ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டவுடன் நாளிதழ்களில் வெளிவரும் சந்தை விலைவிகிதங்களின்படி இந்தப்பணிக்கான சந்தை மதிப்பு ரூ.52,52,561/– ஆகிறது. இத்தொகை அலுவலக மதிப்பீட்டை விட 56.95% கூடுதலாகும். இப்பணிக்கு திருவாளர்கள் நவீன பொறியாளர்கள் கட்டுமான கூட்டுறவு சங்கம் பேச்சு வார்த்தைக்குப் பிறகு அவர்கள் அளித்த ஒப்ப விழுக்காடு (+)35.00 % சந்தை விலையை விட (–)13.99% குறைவாகும்.

திருவாளர்கள். நவீன பொறியாளர்கள் கட்டுமான கூட்டுறவு சங்கம் அவர்களின் இப்பணிக்கான ஒப்பத்தை மேற்சொன்ன ஒப்ப விழுக்காடான 2007–2008ஆம் ஆண்டிற்கான விலைவிகிதத்தை விட (+)35.00%க்கு மேற்சொன்ன ஒப்பத் தொகையான ரூ.45,17,861/–க்கு தொழில்நுட்பக்குழுவும் 03.06.2008 அன்று பரிந்துரைத்துள்ளது.

<u>தி.க.மே.து.ந.க.எண்.எ7/298/2008</u>

எனவே, மேற்கண்ட பணிக்காக பெறப்பட்ட ஒப்பங்களில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள திருவாளர்கள். நவீன பொறியாளர்கள் கட்டுமான கூட்டுறவு சங்கம் அவர்கள் பேச்சு வார்த்தைக்குப் பிறகு அளித்த ஒப்ப விழுக்காடு (+) 35.00 %க்கு இவ்வலுவலக 2007–2008–ம் ஆண்டு(தெற்கு) திட்ட மதிப்பீட்டுத் தொகைக்கு அதிகமாக இவ்வொப்பந்தத்தை திருவாளர்கள். நவீன பொறியாளர்கள் கட்டுமான கூட்டுறவு சங்கம் அவர்களுக்கு ரூ.45,17,861/–க்கு (ரூபாய் நாற்பத்தைந்து இலட்சத்து பதினேழாயிரத்து எண்ணூற்று அறுபத்தொன்று மட்டும்)க்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டி நிலைக்குழு(பணிகள்) மற்றும் நிலைக்குழு(வ.வி.ம.நி) முலம் சமர்ப்பிக்கப்படுகிறது.

“10.6.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தில் தீர்மான எண்.139/2008, நாள்: 10.6.2008-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

“12.6.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தின் தீர்மான எண். 95 /2008 நாள் 12.6.2008–ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ”

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: தி.க.மே.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**இ.பொ.து.ந.க.எண்.எம்1/ 2487 / 2008**

**ஆணையர் அவர்களின் 09.06.08 நாளிட்ட குறிப்பு**

**19.06.2008 அன்று நடந்த ஒத்திவைக்கப்பட்ட சாதாரண மன்றக் கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :282/2008 பொருள் எண். 76

**புதியதாக இரண்டு எண்ணிக்கைகள் கிராப்ளருடன் கூடிய எஸ்கவேட்டர் (Excavator with Grappler attachment) கொள்முதல் செய்தல்**

சென்னை மாநகராட்சியில் துப்புரவு பணிகளில் மண்டலங்களில் சேகரிக்கும் குப்பைகளை மண்டல குப்பை மாற்று நிலையங்களிலிருந்து குப்பை கொட்டும் வளாகத்திற்கு கொண்டு செல்ல லாரிகள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. ஆனால் தற்பொழுது கனரக வாகனங்களை போல் இருமடங்கு குப்பை அள்ளக்கூடிய குப்பை நெருக்கும் வாகனங்கள் மூலம் மண்டலங்களிலிருந்து குப்பை சேகரிக்கப்பட்டு குப்பை மாற்று நிலையங்களில் கொட்டப்படுகின்றன. இதனை உடனுக்குடன் குப்பை கொட்டும் வளாகத்திற்கு எடுத்துச்செல்லும் பொருட்டு 18 கனமீட்டர் திறன் கொண்ட கனரக வாகனங்கள் 10 எண்ணிக்கைகளில் வாங்க பணிஆணை வழங்கப்பட்டுள்ளது.

இதனிடையே குப்பை மாற்று நிலையங்களில் ஏற்கனவே கொட்டப்பட்டுள்ள அதிகப்படியான குப்பைகளை கெட்டியாக பற்றி விரைவாக வாகனங்களில் ஏற்ற , இரண்டு எண்ணிக்கைகளில் கிராப்ளருடன் கூடிய எஸ்கவேட்டர் (Excavator with Grappler attachment) கொள்முதல் செய்ய உத்தேசிக்கப்பட்டு ஒப்பம் கோரப்பட்டது.

ஒப்பத்திறப்பு நாளான 16.05.08 அன்று , கீழ்கண்ட மூன்று ஒப்பதாரர்கள் ஒப்பத்தில் கலந்து கொண்டனர்.

1. திருவாளர்கள் . TRR ஆட்டோமோட்டிவ்
2. திருவாளர்கள். BEML
3. திருவாளர்கள் . TELCO கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்

அவர்களின் தகுதிகள் பரிசீலிக்கப்பட்டு 28.05.08 அன்று தகுதியுள்ள ஒப்பதாரர்களில் விலை விவர உரைகள் திறக்கப்பட்டன. அவைகளின் விவரங்கள் கீழ்வருமாறு

| வ.எண் | விவரம் | ஒப்பந்ததாரரின் பெயர் | சாதனம் ஒன்றின் விலை ரூ. | இரண்டு சாதனங்களின் மொத்த விலை ரூ |
|---|---|---|---|---|
| 1. | இரண்டு எண்ணிக்கைகளில் கிராப்ளருடன் கூடிய எஸ்கவேட்டர் வழங்குதல் (வரிகள் உட்பட) | M/s. TELCO | 56,63,790/- | 1,13,27,580/- |
| 2. | | M/s.BEML | 57,22,888/- | 1,14,45,776/- |
| 3. | | **M/s.TRR ஆட்டோமோட்டிவ்** | **56,18,485/-** | **1,12,36,970/-** |

மேற்கூறப்பட்ட பட்டியலின்படி திருவாளர்கள் TRR ஆட்டோமோட்டிவ் ( JCB கம்பெனியின் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ) அளித்த விலையான ரூ.1,12,36,970/– என்பதே குறைந்த விலையாகும். இதன்படி குறைந்த விலைப்புள்ளி அளித்த ஒப்பதாரர் திருவாளர்கள் TRR ஆட்டோமோட்டிவ் அவர்களை பேச்சு வார்த்தையின் மூலம் விலைக்குறைப்பிற்கு அழைப்பு விடுக்கப்பட்டது. அவர்கள், தமது 06.06.08 தேதியிட்ட கடிதம் மூலம் , ஒப்பத்தில் தாங்கள் அளித்த விலையே மிகவும் குறைவானது என்றும் தங்களால் இதற்கு மேல் குறைக்க இயலாது எனவும் , ஒவ்வொரு சாதனத்திற்கும் ரூ.5000/– மதிப்பில் உதிரி பாகங்கள் இலவசமாக வழங்கவும் இசைவு தெரிவித்திருந்தனர்.

மேலும் ஏற்கனவே சென்னையில் இதே மாதிரி சாதனங்கள் விற்பனை செய்ததற்கான நிரூபணங்களையும் அளித்திருந்தனர்.

**இ.பொ.து.ந.க.எண்.எம்1/ 2487 / 2008**

மேலும் குறைந்த விலை ஒப்பதாரர் திருவாளர்கள் TRR ஆட்டோமோட்டிவ் அளித்த ஒரு சாதனத்தின் விலையான ரூ.56,18,485/– என்பதானது , சந்தை விலையை காட்டிலும் ரூ.4,31,515/– குறைவானது என்பதை கருத்தில் கொண்டு குறைந்த விலை ஒப்பதாரர் அளித்த இரண்டு சாதனங்களின் விலையான ரூ.1,12,36,970/–ஐ நியாயமானதாகவும் ஏற்றுக்கொள்ளக்கூடியதுமாக இருந்ததால் ஒப்பக் குழு கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. இதனை பரிசீலித்த 6.6.2008 அன்று நடந்த ஒப்பக்குழு கூட்டம் பரிந்துரைத்துள்ளது.

மேலும் 2005–2006 ம் ஆண்டு 2 எண்ணிக்கைகள் இவ்வியந்திரங்கள் தலா ரூ. 51,45,307/– விலையில் கொள்முதல் செய்யப்பட்டன. தற்போதைய விலை இதனை விட 9.2 % மட்டுமே அதிகம். 2005–2006 ல் எஃகு (Steel) விலை ரூ. 31,000/ டன். தற்போதைய எஃகு விலை ரூ. 45,000/ டன். விலை உயர்வு ( + ) 31.1 % . இதனை கருத்தில் கொண்டு பரிந்துரைக்கலாம் என கருதப்படுகிறது.

மேற்கண்ட இச்செலவீனத்தொகையை திடக்கழிவு மேலாண்மை துறையின் மூலம் ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புற புனரமைப்பு திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து கொள்முதல் செய்யவும் பரிந்துரைக்கப்படுகிறது.

இது குறித்து மன்றத்தீர்மான எண். 659 / 2007 , நாள் 29.12.07ன்படி அரசின் நிர்வாக அனுமதி வேண்டியும் ஒப்பம் கோரி கொள்முதல் செய்ய நடவடிக்கை மேற்கொண்டதற்கு பின்னேற்பு அனுமதி வேண்டி அரசுக்கு கடிதம் அனுப்பவும் மன்ற அனுமதி பெறப்பட்டது. அதன்படி நிர்வாக அனுமதி வேண்டி அரசுக்கு கடிதம் ஏற்கனவே அனுப்பப்பட்டுள்ளது.

எனவே .

1. ஒப்பத்தில் குறைந்த விலைப்புள்ளி அளித்த JCB கம்பெனியால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமான திருவாளர்கள் TRR ஆட்டோமோட்டிவ் நிறுவனத்திடமிருந்து இரண்டு எண்ணிக்கைகள் கிராப்ளருடன் கூடிய எஸ்கவேட்டர் களின் மொத்த விலையான ரூ.1,12,36,970/– க்கு கொள்முதல் செய்யவும்,
2. மேற்கண்ட இச்செலவீனத்தொகையை திடக்கழிவு மேலாண்மை துறையின் மூலம் ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புற புனரமைப்பு திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து வழங்கவும்,
3. திருவாளர்கள் TRR ஆட்டோமோட்டிவ் நிறுவனத்திடமிருந்து ஒப்ப மொத்தத்தொகையில் இரண்டு சதவீதம் பாதுகாப்பு தொகையாக பெற்றுக்கொண்டு, ஆணையர், சென்னை மாநகராட்சி அவர்களின் பெயரில் உடன்படிக்கை செய்துகொள்ளவும்,
4. மேற்கண்ட இனங்கள் ஏற்கப்படின் ஒப்பம் கோரி முடிவெடுப்பதற்கான அனுமதி ஏற்கனவே மன்ற அனுமதி பெறப்பட்டு , அரசின் பின்னேற்பு அனுமதியை எதிர்நோக்கியுள்ள நிலையில் கொள்முதல் செய்ய அனுமதிக்கவும்,

மேற்கண்ட 1 முதல் 4 இனங்களுக்கு நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"10.6.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தில் தீர்மான எண். 148/2008, நாள்: 10.6.2008-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"12.6.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தின் தீர்மான எண்.102 /2008 நாள் 12.6.2008–ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது "

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: இ.பொ.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(து.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**இ.பொ.து.ந.க.எண்.எம்1/ 2204 / 2008**
**ஆணையர் அவர்களின் 09.06.08 நாளிட்ட குறிப்பு**

**19.06.2008 அன்று நடந்த ஒத்திவைக்கப்பட்ட சாதாரண மன்றக் கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :283/2008 பொருள் எண்.77

**புதியதாக 7 ஆய்வு வாகனங்கள் கொள்முதல் செய்தல்**

சென்னை மாநகராட்சி, இயந்திரப் பொறியியல் துறையின் கீழ் ஆய்வு பணியில் 58 மகேந்திரா (ஜீப்) வாகனங்கள் முழுமையாக ஈடுபடுத்தப்பட்டு வருகின்றன. இவற்றில் 10ஆண்டுகளுக்கு மேல் ஒடி பழுதடைந்த இவ்ஆய்வு வாகனங்களுக்கு அதன் பராமரிப்பு செலவு மற்றும் பழுதுபார்க்கும் செலவு மிக அதிகம் செலவாகுவதையும் மற்றும் அடிக்கடி பெரும்பழுது ஏற்படுவதாலும் இவைகளின் உபயோகத் தன்மை மிகக் குறைந்த அளவே உள்ளது. இதனால் ஆய்வு பணிகள் அதிகம் பாதிக்கப்படுகின்றன. இதனை கருத்தில் கொண்டு அரசு ஆணை .எம்.எஸ்.எண்.960, உள்துறை நாள்.12.4.1979ன்படி ஒரு வாகனம் 10 ஆண்டுகளுக்கு மேல் பயன்படுத்தப்பட்டு வந்தாலும் அல்லது 2.5.இலட்சம், கி.மீ. தூரம் உபயோகப்படுத்தப்பட்டாலும், அவ்வாகனங்கள் கழிவு செய்யலாம் என்ற ஆணையின்படி , கீழ்கண்ட 7 பழைய மகேந்திரா ஆய்வு வாகன பதிவு எண்கள் 1) TN.04 B 3895. 2) TN 04 B 3967. 3) TN04 B 3958. 4) TN04 A 9683 5) TN04 A 9681 6) TN04 B 3994. 7) TN04 B 6394 14 ஆண்டுகளுக்கு மேலும் 2.5 லட்சம் கிலோமீட்டர்களுக்கு மேல் பயன்படுத்தப்பட்டு வருகின்றபடியால் , இதனை கழிவு செய்து மாற்றாக, 2008–2009 ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்டத்தில் 07 புதிய மகேந்திரா ஜீப் வாங்குவதற்கு முடிவு செய்யப்பட்டு ஒப்பம் கோரப்பட்டு 02.05.08 அன்று திறக்கப்பட்டது. இவ்வாகனங்கள் மண்டல செயற்பொறியாளர்களுக்கு வழங்கப்படவுள்ளது

இதில் ஒரு ஒப்பந்ததாரார் மட்டும் கலந்துகொண்டு கீழ்கண்ட விவரங்கள் மற்றும் விலைப்புள்ளிகள் அளித்துள்ளார்கள்.

| வ. எண் | விவரம் | திருவாளர்கள் மகேந்திரா & மகேந்திரா லிமிடெட் | |
|---|---|---|---|
| | | ஒன்றின் விலை | மொத்த விலை |
| 1 | 07 புதிய மகேந்திரா ஜீப் வழங்குதல் வரி உட்பட | 5,06,286.00 | 35,44,002.00 |
| 2. | தற்காலிக பதிவு செலவு , தற்காலிக காப்பீட்டு செலவு மற்றும் போக்குவரத்து செலவு உட்பட | 6780.00 | 47,460.00 |
| | மொத்தம் | 5,13,066.00 | **35,91,462.00** |

மேற்கண்ட ஒப்பந்ததாரர் ஒப்ப வைப்புத்தொகையாக திருவாளர்கள் மகேந்திரா & மகேந்திரா லிமிடெட் நிறுவனம் ரூ.45,000/–க்கான வங்கி வரைவோலையும் செலுத்தியுள்ளனர். இத்தொகையினை சென்னை மாநகராட்சி கருவூலத்தினை செலுத்தும் சீட்டு எண்.13054/8.5.2008 அன்று செலுத்தப்பட்டது. அதன்படி, தகுதியான ஒரே ஒப்பந்ததாரராகும். வாகன உற்பத்தியாளருமான, திருவாளர்கள். மகேந்திரா & மகேந்திரா லிமிடெட் நிறுவனம், சென்ற ஆண்டு 12 போலேரோ மகேந்திரோ ஆய்வு வாகனங்கள் சென்னை மாநகராட்சிக்கு வழங்கியுள்ளது. இவ்வாகனங்கள் மிகவும் நன்றாக இயங்கி வருகிறது. இதனை கருத்தில் கொண்டும் பெரும்பாலான (58 மகேந்திரா ஆய்வு வாகனங்கள்) சென்னை மாநகராட்சியில் இயங்கி வருகிறது. இதனை கருத்தில் கொண்டும் இவ் ஒரே ஒரு ஒப்பந்தமாக கலந்து கொண்ட இந்நிறுவனத்தை பரிசீலனை செய்து, ஏற்றுக் கொள்ளலாம் என கருத்துக் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

அதன்படி, திருவாளர்கள் மகேந்திரா & மகேந்திரா லிமிடெட் நிறுவனம் ஒரு வாகனத்தின் விலையாக ரூ.5,13,066/– வீதம் 07 வாகனங்களுக்கு ரூ. 35,91,462/–(தற்காலிக பதிவு வரி, காப்பீட்டு வரி மற்றும் போக்குவரத்து செலவாக ரூ.6780/– x 7 = ரூ.47,460/– உட்பட ) ஒப்பத்தில் கோரியுள்ளனர்.

மேலும் திருவாளர்கள். மகேந்திரா & மகேந்திரா லிமிடெட் நிறுவனம் விலைக்குறைக்க வேண்டி பேச்சு வார்த்தைக்குப்பின் ஒரு வாகனத்தின் விலையாக ரூ.4,96,253.25 ஆக விலையினை குறைத்து, 7 வாகனங்களுக்கு மொத்த விலையாக ரூ.34,73,773/– ஆக தமது 19.05.08 நாளிட்ட கடிதம் மூலம் அரசு சிறப்பு விலையாக அளித்துள்ளனர்.

இக்கோப்பு 06.06.08 அன்று ஒப்பக்குழுமத்திற்கு சமர்பிக்கப்பட்டு கீழ்கண்டவாறு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

**இ.பொ.து.ந.க.எண்.எம்1/ 2204 / 2008**

கடைசியாக ஏப்ரல் 2007ல் வாங்கப்பட்ட இதே மாதிரியான வாகனத்தின் விலையான ரூ.4,64,603/–யை விட தற்பொழுது ஒப்பதாரர் குறிப்பிட்டுள்ள விலையான ரூ.4,96,253.25/– ஆனது, 6.81 சதவீதம் மட்டுமே அதிகமாக உள்ளது. தற்போதைய மிக அதிகமான எஃகு விலை ஏற்றம் மற்றும் எரிபொருள் விலை உயர்வினால் சந்தைவிலையில் காணப்படும் விலை உயர்வுகளை கருத்தில் கொண்டு திருவாளர்கள். மகேந்திரா & மகேந்திரா நிறுவனம் குறைத்து அளித்த ஒப்ப விலையே நியாயமானது என ஒப்பக்குழுவால் பரிந்துரைக்கப்பட்டது.

அதன்படி 7 புதிய மகேந்திரா & மகேந்திரா போலேரோ LX ரகம் வாகனம் வாங்குவதற்காக மொத்த செலவீனம் ரூ.34,73,773/– இயந்திரப் பொறியியல் துறையின் 2008–2009 ஆம் ஆண்டு ஒதுக்கீடு செய்யப்பட்ட மூலதன திட்ட நிதியில் இருந்து செலவு செய்யப்படும்.

எனவே

1. மண்டல செயற்பொறியாளர்கள் ஆய்விற்காக இயந்திர பொறியில் துறைக்கு ஏழு பழைய ஆய்வு வாகனங்களை கழிவு செய்து மாற்றாக ஏழு புதிய மகேந்திரா & மகேந்திரா போலேரோ ஜீப் வாகனத்தை ஒப்ப விலையாக அரசு சிறப்பு விலையில் மொத்தம் ரூ.34,73,773/–க்கு வாகன உற்பத்தியாளரான திருவாளர்கள் மகேந்திரா & மகேந்திரா லிமிடெட் நிறுவனத்திடமிருந்து வாங்கவும்,அதற்கான பணி ஆணை வழங்கவும்
2. வாகனங்கள் வாங்குவதற்காக திருவாளர்கள் மகேந்திரா & மகேந்திரா லிமிடெட் என்ற பெயரில் , 7 பொலேரோ LX வாகனங்கள் மொத்த விலையான ரூ.34,73,773/–க்கு முன்பணம் வழங்கவும், இந்த முன்பணத்தை திருவாளர்கள் மகேந்திரா & மகேந்திரா லிமிடெட் என்ற நிறுவனத்தின் பெயரில் வங்கிப் கேட்பு காசோலை ( Payable at Chennai ) வழங்கவும்,
3. முதல் இனம் ஏற்கப்படின் திருவாளர்கள் மகேந்திரா & மகேந்திரா லிமிடெட் நிறுவனம் ஒப்பந்தத்தில் கேட்டுக்கொண்டபடி அந்நிறுவனத்தால் அங்கீகரிக்கப்பட்ட விற்பனையாளரான திருவாளர்கள் M.P.L. மோட்டார்ஸ் (பி) லிமிடெட் நிறுவனத்திற்கு தற்காலிக பதிவு, தற்காலிக காப்பீட்டுச்செலவு மற்றும் போக்குவரத்து செலவுத் தொகை சேர்த்து ஒரு வாகனத்திற்கு ரூ.6780/– வீதம் 7 வாகனங்களுக்கு ரூ.47,460/– காசோலையாக முன்பணமாக வழங்கவும்
4. ஏழு வாகனங்களுக்கு காப்பீட்டு செலவு , நிரந்தர வாகன பதிவு செலவு மற்றும் ஆயுள் வரி, நெம்பர் பிளேட் செலவு ஆகியவற்றிற்கான காசோலை உதவி செயற்பொறியாளர் (இ)–4 அவர்களின் பதவி பெயரில் ரூ.3,15,000/– முன்பணமாக வழங்கவும்
5. திருவாளர்கள் மகேந்திரா & மகேந்திரா லிமிடெட் நிறுவனம் உற்பத்தியாளராக இருப்பதால் பாதுகாப்புத் தொகை கட்டுவதிலிருந்தும், உடன்படிக்கை செய்து கொள்வதிலிருந்தும் விலக்கு அளிக்கவும்,
6. இச்செலவினை, இயந்திரப் பொறியியல் துறை 2008–2009 ஆம் ஆண்டு நிதி ஒதுக்கீட்டில் மூலதன செலவு என்ற கணக்கு தலைப்பின் கீழ் செலவு செய்யவும்,

மேற்கண்ட 1 முதல் 6 இனங்களுக்கு நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"10.6.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தில் தீர்மான எண்.147/2008, நாள்:10.6.2008-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: இ.பொ.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

<u>நி.ம.உ.து.ந.க.எண்.எஸ்சி2/1071/2004</u>
<u>ஆணையரின் 27.05.2008 நாளிட்டக் குறிப்பு</u>

**<u>19.06.2008 அன்று நடந்த ஒத்திவைக்கப்பட்ட சாதாரண மன்றக் கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்</u>**

தீர்மான எண் :284/2008 பொருள் எண்.78

<u>சாலை மற்றும் திறந்தவெளி நிலம் எடுத்தல்</u>

மண்டலம் 9, வார்டு எண் 136ல் காவேரி நகர் தமிழ்நாடு குடிசை பகுதி மாற்று வாரிய திட்டப்பகுதியிலுள்ள சாலை (மற்றும்) பூங்காவிற்கான நிலம் போன்றவைகளை சென்னை மாநகராட்சியின் பராமரிப்புக்கு எடுத்துக் கொள்ளுமாறு 18.07.2007 நாளிட்ட கடிதத்தில் தமிழ் நாடு குடிசை பகுதி மாற்று வாரியம் கேட்டுக் கொண்டுள்ளது.

இது தொடர்பாக மேற்கண்ட இடத்தினை நிலம் மற்றும் உடைமைத் துறையின் வட்டாட்சியர் சார்–நில ஆய்வாளர் மற்றும் தமிழ்நாடு குடிசை பகுதி மாற்று வாரிய அலுவலர்களால் கூட்டுப்புலத்தணிக்கை செய்யப்பட்டது. மேற்குறிப்பிடப்பட்டுள்ள சாலை மற்றும் பூங்கா நிலங்கள் மாம்பலம் கிராமம் பிளாக் எண்.30, நகர அளவை எண்.116/3ல் ஒரு பாகத்தில் அடங்கியுள்ளது எனவும் சாலை மற்றும் பூங்காவிற்கான நிலத்தின் பரப்பளவு முறையே 1050.09 மற்றும் 175 சதுர மீட்டர்கள் எனவும் ஒப்படைக்கப்பட உள்ள 2 நிலங்களில் சாலை நிலத்தின் ஒரு பகுதியில் மட்டும் ஒரு சிறிய ஓலை குடிசை ஆக்கிரமிப்பு உள்ளது என்றும் புலத்தணிக்கை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது.

இதனை தொடர்ந்து சாலை நிலத்திலுள்ள குடிசை ஆக்கிரமிப்பினை அகற்றி நிலத்தினை சென்னை மாநகராட்சிக்கு ஒப்படைக்குமாறு தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்திடம் கோரப்பட்டு, ஆக்கிரமிப்பு தற்போது அகற்றப்பட்டுவிட்டது. இந்த இரண்டு நிலங்களையும் சென்னை மாநகராட்சி பராமரிப்புக்கு எடுத்துக்கொண்டு மேம்படுத்த 9வது மண்டல வார்டு குழு தனது தீர்மானம் எண்.80 (ம) 81, நாள் 26.03.2008ல் பரிந்துரை செய்துள்ளது.

இதனைத் தொடர்ந்து மேற்படி சாலையை பராமரிப்புக்கு எடுத்துக் கொள்ளப்பட்டதாக மண்டல அலுவலர்–9 அவர்களின் 13.05.2008 நாளிட்ட குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, மண்டலம்–9, வார்டு எண்.136ல் காவேரி நகர் தமிழ்நாடு குடிசை பகுதி மாற்று வாரிய திட்டப்பகுதியில் சென்னை மாநகராட்சி பராமரிப்புக்கு ஒப்படைக்க உத்தேசிக்கப்பட்ட சாலை நிலத்தினை மண்டல அலுவலர் மூலம் மாநகராட்சி பராமரிப்புக்கு எடுத்துக்கொள்ளப்பட்டதற்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டியும், பூங்காவிற்கான நிலத்தினை சென்னை மாநகராட்சி பராமரிப்புக்கு எடுத்துக்கொள்வது குறித்து மன்றத்தின் அனுமதி வேண்டியும் நிலைக்குழு (வரி விதிப்பு (ம) நிதி) மூலமாக சமர்ப்பிக்கப்படுகிறது.

“12.6.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தின் தீர்மான எண். 87 /2008 நாள் 12.6.2008–ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ”

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: நி.ம.உ.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

நி.ம.உ.து.ந.க.எண்.எல்இ4/4109/1995
ஆணையரின் 13.05.2008 நாளிட்ட குறிப்பு

**19.06.2008 அன்று நடந்த ஒத்திவைக்கப்பட்ட சாதாரண மன்றக் கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :285/2008 பொருள் எண்:79

**குத்தகை நிலம் கையகப்படுத்துதல்**

மேற்பார்வைப் பொறியாளர் (பாலங்கள்–1) அவர்களின் குறிப்பில் பேசின்பாலம் சாலை மற்றும் பழையச்சிறைக்கூடம் சாலை சேர்ந்த தங்கசாலை சந்திப்பில் மேம்பாலம் கட்டுவதற்கு நிலம் கையகப்படுத்துவதற்காக வரைப்படங்கள் அனுப்பி, மேற்படி திட்டத்திற்காக நிலம் கையகப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொண்டுள்ளார். மேற்குறிப்பிட்ட குறிப்புடன் அனுப்பப்பட்ட நில கையகப்படுத்துவதற்கான பட்டியலில் உள்ள நிலங்கள் பின்வருமாறு.

| வ.எண். | சர்வே எண். | பரப்பளவு சதுர அடியில் |
|---|---|---|
| 1 | 596/1 | 841.23 |
| 2 | 596/2 | 2836.19 |
| 3 | 596/4 | 1210.89 |
| 4 | 596/5 | 1160.41 |
| 5 | 597/1 | 121.59 |
| 6 | 596/8 | 264.71 |
| 7 | 596/7 | 4378.79 |
| 8 | 596/9 | 1205.30 |
| 9 | 596/10 | 1287.81 |
| 10 | 596/11 | 1394.83 |
| 11 | 596/12 | 1296.32 |
| 12 | 596/13 | 1398.10 |
| 13 | 599/1 | 1544.09 |
| 14 | 599/2 | 4092.56 |
| 15 | 599/3 | 338.6352 |
| 16 | 599/4 | 1582.01 |
| 17 | 599/5 | 1376.48 |
| 18 | 599/6 | 6887.11 |
| 19 | 599/7 | 490.1826 |
| 20 | 599/8 | 958.45 |
| 21 | 599/9 | 5917.68 |
| 22 | 599/10 | 352.5452 |
| 23 | 599/11 | 2991.32 |
| 24 | 599/12 | 5368.40 |
| 25 | 599/13 | 1581.34 |
| 26 | 599/14 | 3543.28 |
| 27 | 599/15 | 2465.4250 |
| 28 | 599/16 | 2260.4571 |
| 29 | 599/18 | 1566.17 |
| 30 | 599/19 | 1722.22 |
| 31 | 600/3 | 1294.13 |
| 32 | 600/1 | 882.86 |
| 33 | 600/1 & 621/1 | 4097.71 |
| 34 | 668/1 | 34358.76 |
| 35 | 668/5 | 1402.4384 |
| 36 | 668/3 | 30227.87 |
| 37 | 672 | 12985.69 |
| 38 | 671/6 | 22538.23 |
| 39 | 671/14 | 0.31 |
| 40 | 671/5 | 13268.73 |
|  | மொத்தம் | 176181.56 |

<u>நி.ம.உ.து.ந.க.எண்.எல்இ4/4109/1995</u>

மேற்கண்ட பட்டியலில் வரிசை எண்.1 முதல் 30 வரையுள்ளவை சென்னை மாநகராட்சி பொது நிலம் ஆகும். வரிசை எண்.31 முதல் வரிசை எண்.40 வரையிலுள்ளவை தனியார், இராணுவம் மற்றும் அரசு பொதுப்பணித்துறை ஆகியவற்றை சார்ந்த நிலங்கள் என்பதால், இவ்வினங்களிலுள்ள நிலங்களை கையகப்படுத்த தனி நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

தங்கச்சாலை மேம்பாலத்திற்காக கையகப்படுத்தப்படவேண்டிய நிலங்களின் பட்டியலில் வரிசை எண்.1 முதல் 30 வரையுள்ள சென்னை மாநகராட்சி பொது என வகைப்படுத்தப்பட்ட நிலங்கள் முன்னர் மர வியாபாரிகளுக்கு குத்தகை அடிப்படையில் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. குத்தகை காலம் முடிந்தபின்னர் குத்தகை மீண்டும் புதுப்பிக்கப்படவில்லை, எனினும் நில குத்தகை பெற்றவர்கள் நிலத்தினை தொடர்ந்து அனுபவித்து வருகின்றனர். மேற்படி நிலங்கள் சிலவற்றை குத்தகை பெறாத சிலரும் மாநகராட்சியின் அனுமதியின்றி அனுபவித்து வருகின்றனர்.

மேற்படி நிலங்களில் நில அனுபவிப்பாளர்களின் அனுபவம் சென்னை மாநகராட்சி விதிமுறைகளுக்கு புறம்பானது என்பதால், சம்பந்தப்பட்ட நிலத்திற்கு வழங்கப்பட்டிருந்த குத்தகையினை ஏன் ரத்து செய்யக்கூடாது என்ற விளக்கம்கோரி, நில அனுபவிப்பாளர்களுக்கு 27.10.2000 நாளிட்டு அறிவிப்புகள் அனுப்பப்பட்டது. அனுபவிப்பாளர்கள் தெரிவித்த விவரங்களின் அடிப்படையில் நிலத்தை திரும்ப பெறுவதற்கான தொடர் நடவடிக்கைக்காக மண்டல அலுவலர்–2 அவர்களிடம் சில விவரங்கள் கோரி, நடவடிக்கை நிலுவையில் உள்ளது.

தற்போது மேற்படி இடத்தில் மேம்பாலம் கட்டும்பணி குறித்த கருத்துருவிற்காக மேற்படி நிலங்களை நிலம் மற்றும் உடைமைத்துறை சார் நில அளவை ஆய்வாளர் மற்றும் வட்டாட்சியர் புலத்தணிக்கை செய்தனர். மேற்படி ஆய்வில் மேற்படி இடங்களில் கடைகளும், பொது அரசு சார்ந்த நிறுவனங்கள் மற்றும் அரசியல் சார்ந்த நினைவகம் (வி.பி.சிந்தன் நினைவகம்) ஒன்றும் உள்ளது என கண்டறியப்பட்டது. மேலும் கடைகளில் தற்போதைய அனுபவதாரர்களின் விவரமும் சேகரிக்கப்பட்டது. பின்னர் மாவட்ட வருவாய் அலுவலர், நிலம் மற்றும் உடைமைத்துறை அவர்களும் மேற்குறிப்பிட்ட இடங்களை ஆய்வு செய்தார்.

மேற்படி ஆய்வின் போது குத்தகை முடிவுற்ற நிலங்களின் மீது உரிய அனுமதியின்றி நிரந்தர கட்டுமானங்கள் கட்டப்பட்டுள்ளதும், இந்நிலங்களின் மீது கட்டப்பட்ட தற்காலிக கட்டுமானங்களை உரிய அனுமதியின்றி பிறருக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளதும் தெரிய வந்துள்ளது.

மேற்படி பட்டியலில் வ.எண்.1 முதல் 30 முடிய குறிப்பிடப்பட்டுள்ள சென்னை மாநகராட்சி பொது நிலங்கள் குறித்து கீழ்காணும் 3 வழக்குகள் தவிர இதர வழக்குகள் ஏதேனும் உள்ளதா என்றும், (2) குத்தகை முடிவுற்ற இவ்வினங்களில் குத்தகை பெற்றவர்களிடமிருந்து மேற்படி நிலங்களை மீளப் பெறுவது குறித்தும், (3) குத்தகை முடிவுற்ற பின் மாநகராட்சிக்கு ஒப்படைக்காமல், முறையான அனுமதியின்றி பிறருக்கு மாற்றப்பட்ட நிலங்களை, அத்தகைய அனுமதி பெற்ற அனுப்பவிப்பாளர்களிடமிருந்து மீளப் பெறுவது குறித்தும், (4) மேற்படி நிலங்களை அனுபவித்தமைக்கு இழப்பீடு கட்டணம் பெறுவது குறித்தும் (Damage fees for usage & Occpation) இப்பொருள் குறித்து இதர சட்ட நுணுக்கங்கள் குறித்தும் சட்ட அலுவலர் அவர்களின் குறிப்புரை உடனடியாக கோரப்பட்டது.

மேற்குறிப்பிட்டவற்றில் புல எண்.596/1, 599/6 மற்றும் 599/9 சம்பந்தப்பட்ட நிலங்கள் தொடர்பாக வழக்குகள் நிலுவையில் உள்ளதால் சட்ட அலுவலர் அவர்களிடம் குறிப்புரை பெறப்பட்டு அதன் விவரங்கள் கீழ்க்கண்டவாறு சமர்ப்பிக்கப்படுகிறது..

| புல எண் | வழக்கு தொடர்ந்தவர் மற்றும் வழக்கு எண் | வழக்கின் விவரமும், தற்போதைய நிலையும் | சட்ட அலுவலரின் குறிப்புரை |
|---|---|---|---|

| | | | |
|---|---|---|---|
| 596/1 | Ponnusamy Naiker & Sons 10590/2004 | For granting interim injunction restraining the Chennai Corporation from interfering with the possession and enjoyment of suit premises–(II)interim orders obtained case pending in High Court. | இடைக்கால தடையாணை நீக்கம் செய்யப்பட்ட பின்னர் மேல் நடவடிக்கை எடுக்கலாம். |
| 599/6<br><br><br><br><br>599/4 | M/s. T.M. Usman Haji & Company 43055/2002 and Abdul Najeeb w.P.No.4284 3/02 | Calling for the records on the file of t Thu.Na.Ka.No.R3/Spl/2002 & the orde No.R3/10855/2002. Dealt in Zone-II | வழக்கு முடிவு செய்யப்பட்டு உள்ளதால் வாடகை உயர்த்தவும், குத்தகையை ரத்து செய்யவும் நடவடிக்கை எடுக்கலாம். |
| 599/9 | P.M. Raju 42028/2002 | Calling for the records on the file of the order dated 30/09/2002 in Ref.Ma.A2.Va.Thu. Na.Ka.No. R3/Spl/2002 and the order dated 15.11.2002 in Ref.Mc.A2.Va. Thu. Na.Ka.No.R3/10855/2002 Dealt in Zone-II – Parawar remarks given by Land and Estate Department. | வழக்கு எண்.43055/2002 அடிப்படையில் வாடகை<br><br>உயர்த்தவும் குத்தகையை ரத்து செய்யவும் நடவடிக்கை எடுக்கலாம். |

மண்டலம்–2, வார்டு–31 பேசின்பாலம் சாலையில் மேம்பாலம் கட்டும் பணிக்காக, பத்தி எண்.1ல் குறிப்பிடப்பட்டுள்ள 1 முதல் 30 வரையிலான இனங்களில் வரிசை எண் 3ல் சென்னை மாநகர குடிநீர் வாரியம் மற்றும் வரிசை எண்.7ல் ஒரு பகுதியில் சென்னை மாநகராட்சி கட்டிடங்கள் உள்ளது.

மேற்கண்டவற்றின் அடிப்படையில் நிலம் கையகப்படுத்துவதற்கான பட்டியலில் நீதிமன்ற வழக்கு காரணமாக வ.எண்.1,16,18 மற்றும் 21–ஐ தவிர இதர நிலங்களில் குத்தகை முடிவுற்றும், குத்தகை நீட்டிப்பின்றி தற்போது அனுபவித்து வருபவர்கள் மற்றும் குத்தகை முடிவுற்றபின் மாநகராட்சிக்கு ஒப்படைக்காமல் முறையாக அனுமதியின்றி பிறருக்கு மாற்றப்பட்ட வகையில் நிலங்களை தற்போது அனுபவித்து வருபவர்களிடமிருந்தும், அதாவது மேற்கண்ட நிலங்களுக்கு குத்தகை அளிக்கப்பட்டவர்கள் மற்றும் அனைத்து அனுபவித்து வருபவர்களிடமிருந்தும் நிலத்தை மீளப் பெறுவதற்கு தமிழ்நாடு பொது சொத்துக்கள் அனுமதியற்ற அனுபவிப்பாளர்களை வெளியேற்றம் சட்டம் 1975ன்படி (Tamil Nadu Public Premises (Eviction of Unauthorized occupation) Act 1975) உரிய நடவடிக்கை மேற்கொள்வதற்காக நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

“23.5.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) கூட்டத்தில் தீர்மான எண்.79/2008 நாள்: 23.5.2008-ன்படி இதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது. “

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: நி.ம.உ.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**ப.து.ந.க.எண்4152(1)/2000**
**ஆணையாளரின் 05.06.2008 நாளிட்ட குறிப்பு**

**19.06.2008 அன்று நடந்த ஒத்திவைக்கப்பட்ட சாதாரண மன்றக் கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :286/2008 பொருள் எண். 80

**தொழில் நுட்ப அனுமதி வழங்க அதிகார வரம்பு**

அரசாணை (நிலை) எண்.81, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மா.ந–1) துறை, நாள்: 21.05.2008–ன்படி, சென்னை மாநகராட்சி பொறியாளர்களுக்கு, தொழில் நுட்ப அனுமதி வழங்க தேவையான அதிகார வரம்பினை, பின்வருமாறு நிர்ணயித்து, அரசு ஆணையிட்டுள்ளது.

| வரிசை எண். | மாநகராட்சி பொறியாளர் | தொழில் நுட்ப அனுமதி வழங்க அதிகார வரம்பு (ரூபாயில்) |
|---|---|---|
| 1 | தலைமை பொறியாளர் | முழு அதிகாரம் |
| 2 | கண்காணிப்பு பொறியாளர் | ரூ. 1 கோடி வரை |
| 3 | செயற் பொறியாளர் | ரூ.30,00,000 லட்சம் வரை (முப்பது லட்சம் வரை) |
| 4 | உதவி செயற் பொறியாளர் | ரூ.2,00,000 லட்சம் வரை (இரண்டு லட்சம் வரை) |

இவ்வரசாணை நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி)–வின் மூலமாக மன்றத்தின் தகவலுக்காகவும், பதிவிற்காகவும் சமர்ப்பிக்கப்படுகிறது.

"10.6.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தில் தீர்மான எண்.127/2008, நாள்:10.6.2008-ன்படி, இதனை நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் பதிவிற்கும், தகவலுக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது".

"12.6.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தின் தீர்மான எண். 104 /2008 நாள் 12.6.2008–ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் பதிவிற்கும், தகவலுக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது. "

"இதனை மன்றம் பதிவு செய்கின்றது"
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: ப.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

நி.ம.உ.து.ந.க.எண்.எல்இ1/1574/2008
ஆணையரின் 10.06.2008 நாளிட்ட குறிப்பு

**19.06.2008 அன்று நடந்த ஒத்திவைக்கப்பட்ட சாதாரண மன்றக் கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :287/2008 பொருள் எண். 81

**சிலை நிறுவுதல்**

அரசு செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அவர்கள் தன் நேர்முக கடிதத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் உவமை கவிஞர் சுரதா சிலை அமைப்புக்குழு, அசோக் பில்லர் பூங்காவில் கவிஞர் சுரதா அவர்களின் உருவச்சிலையை நிறுவுவதற்கு அனுமதி கோரும் மனுவினை அனுப்பி உள்ளதாக தெரிவித்து, இது தொடர்பாக சென்னை மாநகராட்சி ஆணையாளர் அவர்கள் குறிப்பு அளிக்குமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

மேற்படி நேர்முக கடிதத்தில் உவமைக் கவிஞர் சுரதா சிலை அமைப்புக்குழு சமர்ப்பித்துள்ள மனுவில் உவமைக் கவிஞர் சுரதா அவர்களின் சிலையினை அவரின் வாழ் விடத்திற்கு அருகேயுள்ள எழில்மிகு அசோக் பில்லர் பூங்கா (அசோக் நகர் அருகில் 1–வது நிழற்சாலையில் அமைந்துள்ள சென்னை மாநகராட்சி பூங்கா வார்டு–122, பகுதி–24, மண்டலம்–8) அருகேயுள்ள வளைவுப்பகுதியில் அமைத்திட, இடம் ஒதுக்கித் தரும்படி கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

இது தொடர்பாக மேற்படி இடம் புலத்தணிக்கை செய்யப்பட்டது. மேற்படி நிலம் தொடர்பான விவரங்கள் பின்வருமாறு:

| | | | |
|---|---|---|---|
| 1. | கிராமம் | : | கோடம்பாக்கம். |
| 2. | பிளாக் எண் | : | 56 |
| 3. | புல எண் | : | 5/1 |
| 4. | மொத்தப் பரப்பளவு | : | 14 மனை 1076 சதுர அடி |
| 5. | வகைப்பாடு | : | சென்னை மாநகராட்சி – தனி (தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் சென்னை மாநகராட்சிக்கு அளித்த திறந்த வெளி நிலம்) |
| 6. | பயன்பாடு | : | சென்னை மாநகராட்சியால் பூங்காவாக பராமரிக்கப்பட்டு வருகிறது. |

அரசாணை எண்.221, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 20.11.1998ல் நகர்புற உள்ளாட்சி அமைப்புகளின் ஆளுகைக்கு உட்பட்ட பகுதிகளில் சிலை நிறுவுவது தொடர்பாக வெளியிடப்பட்ட ஆணையில், சிலை, நினைவுத்தூண், நினைவு மண்டபம், நினைவு வளைவு போன்றவை எதுவாயினும் அதை அமைப்பதற்கு அரசின் ஒப்புதல் பெற்றாக வேண்டும் என ரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்கண்டவற்றின் அடிப்படையில், மண்டலம்–8 வார்டு குழு தீர்மானத்தை பெற்று நிலைக்குழு (வருவாய் மற்றும் நிதி) மற்றும் மன்றத்திற்கு சமர்ப்பித்து, சிலை நிறுவுவதற்காக நிலம் ஒதுக்கீடு செய்வது குறித்தும், நிலபயன்பாடு மாற்றம் செய்வது குறித்து உரிய தீர்மானங்கள் பெற்று அனுப்பி வைக்கப்படும் என்றும், இது குறித்து தனி நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்றும் அரசுக்கு பதில் அளிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு பூங்கா விளையாட்டு திடல், திறந்த வெளிநிலங்கள் குறித்த விதிகளில் மேற்படி இடங்களில் நிரந்தர கட்டுமானம், அமைப்பு போன்றவற்றை அரசின் அனுமதியின்றி அமைக்கக்கூடாது என்று உள்ளது.

306/05.06.2008 எண்ணிட்ட 8வது வார்டுகுழு தீர்மானத்தில் மேற்குறிப்பிட்ட இடம் திறந்தவெளி இடமாக உள்ளது என்றும், மேலும் இது மாநகராட்சியால் பூங்காவாக பராமரிக்கப்பட்டு வருகின்றது என்றும், அரசின் அனுமதி பெற்ற பின்பே இந்த நிலத்தின் பயன்பாட்டினை மாற்ற இயலும் என்பதால், அரசின் நிலப்பயன்பாடு மாற்றத்திற்கு உட்பட்டு, அரசு குறிப்பிட்டுள்ள இடத்தில் கவிஞர் சுரதா சிலை அமைக்க இடம் ஒதுக்கீடு செய்ய பரிந்துரை அளிக்கப்பட்டுள்ளது.

<u>நி.ம.உ.து.ந.க.எண்.எல்இ1/1574/2008</u>

எனவே, தற்போது பூங்காவாக பயன்படுத்தப்பட்டு வரும் திறந்தவெளி நிலத்தில் வடமேற்கு மூலையில் கவிஞர் சுரதா அவர்களின் உருவச்சிலையை அமைக்க மன்றத்தின் அனுமதி பெற்று அரசுக்கு அனுப்ப நிலைக்குழு (வவிமநி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“12.6.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தின் தீர்மான எண். 108 /2008 நாள் 12.6.2008–ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ”

“கவிஞர் சுரதா வாழ்ந்த அசோக்நகர் பகுதியிலேயே இவருக்கு சிலை நிறுவலாம் என்று அரசுக்கு முன்மொழிவு அனுப்ப மன்றம் தீர்மானிக்கின்றது”

//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: நி.ம.உ.து.

நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**சு.து.ந.க.எண்.சி1/1173/2008**

**ஆணையாளர் அவர்களின் 30.04.2008 நாளிட்ட குறிப்பு**

**19.06.2008 அன்று நடந்த ஒத்திவைக்கப்பட்ட சாதாரண மன்றக் கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :288/2008 பொருள் எண்.82

**பணியமைப்பு – மருத்துவ அலுவலர் பணிநியமன அனுமதி**

சென்னை மாநகராட்சி, சுகாதாரத் துறையில் ஒப்பளிக்கப்பட்ட மருத்துவ அலுவலர் பணியிடங்கள் 94. 2006–07ம் ஆண்டில் 31 பணியிடங்கள் காலியாக இருந்தன. இதன் பின்னர் 3 பணியிடங்கள் பணி ஓய்வினால் காலியானதால் மொத்த காலிப்பணியிடங்கள் 34 ஆக இருந்தன. அரசாணை (ப) எண்.57, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.13.02.2007ன்படி சுகாதாரத் துறையில் காலியாக இருந்த மருத்துவ அலுவலர் பணியிடங்களை 2006–07ம் ஆண்டு 50 விழுக்காடு பணியிடங்களையும் 2007–08ம் ஆண்டில் மீதமுள்ள 50 விழுக்காடு பணியிடங்களையும் நிரப்பிக் கொள்ள ஆணை பிறப்பித்தது. அரசாணையின்படி மருத்துவ அலுவலர்கள் காலிப்பணியிடங்களை நிரப்பிட மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகத்திலிருந்து நபர் பட்டியல் பெறப்பட்டு, ஆறு கட்டங்கள் மூலமாக 23 நபர்களுக்கு பணி நியமன ஆணை வழங்கப்பட்டது. பணி நியமன உத்தரவு வழங்கியும் பணியில் சேராததாலும், பணியில் சேர்ந்து ஓரிரு நாளில் பணிதுறப்பு செய்ததாலும் 11 பின்னடைவு (Back Log) பணியிடங்கள் காலியாக எழுந்தது.

மருத்துவ அலுவலர் பதவி சென்னை மாநகராட்சி பணியமைப்பில் வகுப்பு–2ன் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளதால். இப்பதவி சென்னை மாநகராட்சி சட்ட விதி 1919 துணை விதி 85 (3) (பி)ன்படி அரசின் உறுதியாக்கத்திற்குட்பட்டு மன்றம் நியமனம் செய்ய அதிகாரம் பெற்றுள்ளது.

சென்னை மாநகராட்சி பொது சுகாதாரம் மற்றும் மருத்துவ பணி விதிகள் 1998ன்படி மருத்துவ அலுவலர் (அலோபதி) பதவியினை நேரடி நியமனம் மூலம் நிரப்பப்பட வேண்டும். இப்பதவிக்கான காலமுறை ஊதிய விகிதம் ரூ.8000–275–13,500 கல்வித் தகுதி அங்கீகரிக்கப்பட்ட பல்கலை கழகத்தினால் வழங்கப்பட்ட M.B.B.S பட்டம் மற்றும் தமிழ்நாடு மருத்துவ அவையில் பதிவு செய்திருக்க வேண்டும்.

எனவே 11 பின்னடைவு பணியிடங்களை நிரப்பிட மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்திலிருந்து நபர் பட்டியல் கோரப்பட்டது. அரசாணை எண்.18 தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (N2) துறை நாள்.25.02.2008ன்படி ஒரு காலிப்பணியிடத்திற்கு 5 நபர்கள் என்ற விகிதாசார அடிப்படையில் 55 நபர்கள் அடங்கிய நபர் பட்டியல் பெறப்பட்டது. வேலைவாய்ப்பு அலுவலகத்திலிருந்து பெறப்பட்ட பட்டியலில் உள்ள 55 நபர்களுக்கும் 15.04.2008 அன்று சான்றிதழ் சரிபார்ப்பிற்கு ஆஜராகும்படி அழைப்புக் கடிதங்கள் அனுப்பப்பட்டது. இவர்களில் 15.04.2008 அன்று கீழ்கண்ட 15 நபர்கள் மட்டுமே சான்றிதழ் சரிபார்ப்பிற்கு ஆஜரானார்கள். அதன் விவரம் பின்வருமாறு.

| வ. எண் | பதிவு எண் | பெயர் மற்றும் விலாசம் | பிறந்த தேதி/ இனம் மற்றும் வயது |
|---|---|---|---|
| 1 | **2002 M 19254 S.F** 04.10.2002 | R. முருகானந்தம், 40 தெலுங்கு செட்டி தெரு, பழைய வண்ணாரப்பேட்டை, சென்னை–21 | 23.11.1975 MBC (NP) |
| 2 | **2003 M 20205 S.F** 13.11.2003 | R.நிரஞ்சன் குமார், 4/59 F2 நெய்தல் பிளாட்ஸ் திருவள்ளுவர் நகர், திருவான்மியூர் சென்னை–41 | 16.04.1979 MBC (NP) (இவர் அசல் சான்றிதழ் ஏதும் சமர்ப்பிக்கவில்லை) |
| 3 | **2004 M 05392 S.F** 11.05.2004 | M.சேரன் 20/1 சத்தியா அபார்ட்ஸ், ஜானகிராம் காலனி, வில்லிவாக்கம், சென்னை–49 | 01.07.1980 MBC (NP) |

**சு.து.ந.க.எண்.சி1/1173/2008**

| | | | |
|---|---|---|---|
| 4 | **2004 M 12731 S.F** 20.08.2004 | K.சுரேஷ்குமார்<br>5, பாரி தெரு,<br>அண்ணா நெடும்பாதை,<br>சூளைமேடு, சென்னை–94 | 20.12.1977 MBC (NP) |
| 5 | **2004 M 18012 S.F** 30.09.2004 | G.T.குமரகுரு ராஜன்<br>10, பிளாக் நெ.136, (புது எண்.23) கணபதி காலனி, அண்ணா நகர் கிழக்கு,<br>சென்னை–102 | 12.04.1982 MBC (NP) |
| 6 | **2005 F 02086 S.F** 14.02.2005 | H.பத்மினி பிச்சேஸ்வர்,<br>பிளாட்5A/தோஷி மேனர், 59, செட்டித் தெரு,<br>அயனாவரம், சென்னை–23 | 16.06.1965 SC (NP) (W) |
| 7 | **2005 F 03372 S.F** 11.03.2005 | M.பிரேமா,<br>30/9 சத்திய மூர்த்தி தெரு, தேவராஜ் நகர்,<br>தசரதபுரம், சாலிகிராமம், சென்னை–93 | 02.06.1971 SC (NP) (W) |
| 8 | **2002 M 00279 S.F** 07.01.2002 | S.சந்திரசேகர்,<br>26 சத்திய மூர்த்தி தெரு, தேவராஜ் நகர்,<br>சாலிகிராமம், சென்னை–93 | 21.07.1963 SC (NP) (G.t) |
| 9 | **2004 F 18773 S.F** 18.10.2004 | J.கோகிலா,<br>ப.எண்.24 ஐயப்ப செட்டி தெரு, மண்ணடி,<br>சென்னை–01 | 23.12.1980 BC (NP) (W)<br>(அசல் சான்றிதழ் ஏதும் சமர்ப்பிக்கவில்லை) |
| 10 | **2005 F 01957 S.F** 10.02.2005 | S.சுதா,<br>59/7(C.P.W.D குடியிருப்பு கே.கே.நகர்,<br>சென்னை–78 | 13.08.1979 BC (NP) (W) |
| 11 | **2005 F 02213 S.F** 15.02.2005 | S.லட்சுமி,<br>7/4 கணேஷ் நகர் பிராதான சாலை,டெலிபோன் காலனி, ஆதம்பாக்கம்,<br>சென்னை–88 | 25.04.1971 Gl (NP) (W) |
| 12 | **2005 F 02310 S.F** 17.12.2005 | G.பானுமதி ராதிகா,<br>H-90 F4 SEAVIEW Appartments<br>வால்மீகி நகர், திருவான்மியூர்,<br>சென்னை–41 | 11.06.1974 Gl (NP) (W) |
| 13 | **2001 M 17857 S.F** 03.10.2001 | S.P.மகாராஜா,<br>3074 Z பிளாக், 5வது தெரு, 13வது பிரதான சாலை, அண்ணாநகர் (மேற்கு)<br>சென்னை–04 | 01.06.1977 B.C (G1) (NP) |
| 14 | **2002 M 00424 S.F** 08.01.2002 | M.அருள்,<br>ப.எண்.75, பு.எண்.40, ஜோன்ஸ் ரோடு,<br>சைதாப்பேட்டை, சென்னை–15 | 24.02.1976 B.C (G1) (NP) |
| 15 | **2002 M 00551 S.F** 10.01.2002 | M.A.சையத் இஸ்மாயில்,<br>120, இராமசாமி தெரு, மண்ணடி,<br>சென்னை–01 | 03.01.1970 B.C (G1) (NP) |

15.04.2008 அன்று நடைபெற்ற மருத்துவ அலவலர்களுக்கான சான்றிதழ் சரிபார்ப்பிற்கு கலந்து கொண்ட மேற்கண்ட 15 மருத்துவர்களில் 11 காலிப் பணியிடங்களுக்கு கீழ்கண்ட வகையில் இன சுழற்சி முறையில் செய்யப்படவேண்டும்.

| வ. எண் | இனம் | சான்றிதழ் சரிபார்ப்புக்கு கலந்து கொண்டவர்கள் | தேர்ந்தெடுக்கப்பட வேண்டியது |
|---|---|---|---|
| 01 | ஆதி திராவிடர் (SCpty) | 01 | 01 |
| 02 | மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பு (MBC) NP | 05 | 04 |
| 03 | பொதுப்போட்டி (OC(P) | 03 | 03 |
| 04 | ஆதி திராவிடர் (NP) (W) | 02 | 01 |
| 05 | பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (NP(W) | 02 | 01 |
| 06 | பொதுப்போட்டி (OCNP(W) | 02 | 01 |

**சு.து.ந.க.எண்.சி1/1173/2008**

சான்றிதழ் சரிபார்ப்பிற்கு ஆஜரான நபர்களில் வ.எண்.2 மற்றும் 9 முறையே இனசுழற்சி படி மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பு (MBC NP) பிரிவில் கலந்து கொண்ட திரு.நிரஞ்சன் குமார், என்பவரும் பிற்படுத்தப்பட்ட வகுப்பு (பெண்கள்) (BC NP (W) பிரிவில் கலந்து கொண்ட J. கோகிலா, என்பவரும் அசல் சான்றிதழ்கள் ஏதும் சமர்ப்பிக்கவில்லை. எனவே இவர்களது பெயரை பணி நியமனத்திற்கு பரிசீலிக்க இயலாத நிலை உள்ளது மேலும், ஆதி திராவிடர் பெண்கள் (SC NP (W) பிரிவு, பொதுப்போட்டி பெண்கள் பிரிவு (OC NP (W) ஆகிய பிரிவுகளில் தலா ஒரு பதவிக்கு தலா இரண்டு நபர்கள் வீதம் (இரண்டு பணியிடத்திற்கு 4 நபர்கள்) சான்றிதழ் சரிபார்ப்புக்கு கலந்து கொண்டனர். இவர்களில் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தின் பதிவு மூப்பு அடிப்படையில் இருவரை பணி நியமனம் செய்யலாம். அவ்வாறு பதிவு மூப்பு மற்றும் இன சுழற்சி அடிப்படையின்படி தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய நபர்களின் பட்டியல் பின்வருமாறு அமைகிறது.

| வ. எண் | போட்டி இனம் | பெயர் மற்றும் இனம் திரு/திருமதி/ செல்வி | பிறந்த தேதி மற்றும் வயது | மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகம் பதிவு/தேதி |
|---|---|---|---|---|
| 1 | SC(P) இப்பிரிவில் நபர்கள் இல்லாததால் Non Priority GT நபர்கள் மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகத்தால் பரிந்துரைக்கப்பட்டுள்ளனர் | சந்திரசேகர் SC (NP) (G.T) | 21.07.1963 (45) | **2002 M 00279 S.F** 07.01.2002 |
| 2 | மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பு MBC (NP) | முருகானந்தம் | 23.11.1975 (33) | **2002 M 19254 S.F** 04.10.2002 |
| 3 | " " | M.சேரன் | 01.07.1980 (28) | **2004 M 05392 S.F** 11.05.2004 |
| 4 | " " | K.சுரேஷ்குமார் | 20.12.1977 (31) | **2004 M 12731 S.F** 20.08.2004 |
| 5 | " " | G.T.குமரகுரு ராஜன் | 12.04.1982 (26) | **2004 M 18012 S.F** 30.09.2004 |
| 6 | பொதுப்போட்டி (OC(P) OC(P) பொதுப்போட்டியில் நபர்கள் இல்லாததால் NP நபர்கள் மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகத்தால் பரிந்துரைக்கப்பட்டுள்ளனர் | S.P.மகாராஜா, | 01.06.1977 (31) | **2001 M 17857 S.F** 03.10.2001 |
| 7 | " " | M.அருள், | 24.02.1976 (32) | **2002 M 00424 S.F** 08.01.2002 |
| 8 | " " | M.A.சையத்இஸ்மாயில் , | 03.01.1970 (38) | **2002 M 00551 S.F** 10.01.2002 |
| 9 | SC NP (W) | பத்மினி பிச்சேஸ்வர் | 16.06.1965 (43) | **2005 F 02086 S.F** 14.02.2005 |
| 10 | BC NP (W) | S.சுதா | 13.08.1979 (29) | **2005 F 01957 S.F** 10.02.2005 |
| 11 | OC NP (W) | S.லட்சுமி | 25.04.1971 (37) | **2005 F 02213 S.F** 15.02.2005 |

**சு.து.ந.க.எண்.சி1/1173/2008**

மேற்கண்ட பட்டியலில் வரிசை எண்.1, 8, மற்றும் 11 ஆகிய நபர்கள் வரையறுக்கப்பட்டுள்ள பணி விதிகளின்படி 35 வயதை கடந்துள்ள போதிலும் அரசாணை எண்.98 பணியாளர்கள் மற்றும் நிர்வாக சீர்திருத்தத்துறை நாள்.17.07.2006ல் அரசு பணிகளுக்கு வயது வரம்பினை மேலும் 5 ஆண்டுகளுக்கு தளர்வு செய்து ஆணை வழங்கியுள்ளதாலும், இவர்களுக்கு வயது வரம்பிலிருந்து தளர்வணை அளித்து பணிநியமனம் வழங்கலாம். மேலும் அரசாணையின்படி வயது வரம்பு கடந்துள்ள வ.எண்.1 மற்றும் 9லுள்ள நபர்களுக்கு Tamil Nadu State and Subordinate Service Rules 12 d (ii)ன்படி வரையறுக்கப்பட்டுள்ள பணி விதிகளில் குறிப்பிட்டுள்ள வயதினை தளர்வு செய்து அரசாணையை எதிர்நோக்கி பணி நியமனம் வழங்கலாம்.

மேற்படி பட்டியலில் உள்ள 11 நபர்களை சென்னை மாநகராட்சி சட்ட விதி 1919 துணை விதி 85(3) (b)ன்படி அரசின் உறுதியாக்கத்திற்குட்பட்டு தற்காலிகமாக ரூ.8000–275–13500 என்ற காலமுறை ஊதியத்தில் மருத்துவ அலுவலர் பதவியில் பணிநியமனம் செய்ய நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தை கருத்தில் கொண்டு இதற்கு நியமனக்குழு சுற்றில் பரிந்துரைத்து மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

" இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தை கருத்தில் கொண்டு இதனை நியமனக்குழு சுற்றில் பரிந்துரைத்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது. "

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: சு.து.

நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**க.து.ந.க.எண்.டி1/008/2008**
**ஆணையர் அவர்களின் 29.04.2008 நாளிட்ட குறிப்பு**

**19.06.2008 அன்று நடந்த ஒத்திவைக்கப்பட்ட சாதாரண மன்றக் கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :289/2008 பொருள் எண்.83

**கல்வித்துறை சமுதாயக் கல்லூரி – அருணாச்சலம் தெருவில் தொடர்ந்து – 3 பாடப்பிரிவுகளில் குறுகிய கால பயிற்சி நடத்தவும் – மேலும் 4 புதிய பாடப் பிரிவுகளில் குறுகிய காலப் பயிற்சி – சமுதாயக் கல்லூரி நாட்டுப்பிள்ளையார் கோயில் தெருவில் – ஜுன் 2008 முதல் 2 ஆண்டுகள் நடத்த மன்றத்தின் அனுமதி வேண்டுதல்.**

சென்னை மாநகராட்சி கல்வித்துறையின் கீழ் நான்கு சமுதாயக் கல்லூரிகள் 1999 முதல் இயங்கி வருகின்றன. தொழில் துறையில் தற்போதுள்ள வேலை வாய்ப்புக்கான மாறிவரும் சூழலின் அடிப்படையில், சென்னை மாநகராட்சி, தென் சென்னை பகுதி, அருணாச்சலம் தெருவில் உள்ள சமுதாயக் கல்லூரியில் 1)B.P.O 2) Customer Relations and Sales 3 ) Hospitality Services ஆகிய மூன்று தொழிற் பாடப் பிரிவுகளில் மூன்று மாத குறுகிய கால பயிற்சி ஆகஸ்டு 2007 முதல் தொடங்கப்பட்டு நடைபெற்று வருகிறது. இதில் முதல் மற்றும் இரண்டாம் பிரிவுகளில் சேர்ந்து பயிற்சி பெற்ற 224 மாணவர்களில் 95 சதவீதம் பேர், வேலை வாய்ப்பைப் பெற்று நல்ல நிறுவனங்களில் பணிபுரிந்து வருகின்றனர். தற்போது தொடர்ந்து நடைபெறும் 3ஆம் பிரிவு பயிற்சி மே 2008ல் முடிவடையும்.

இக்குறுகிய காலப் பயிற்சியின் மூலம் ஏழை மாணவ மாணவிகளுக்குத் தொழிற் பயிற்சி அளித்து, பயிற்சி முடிந்தவுடன் அவர்களின் திறமைக்கு ஏற்ப நகரில் முன்னோடியாக உள்ள தொழில் நிறுவனங்களில் கணிசமான ஊதியத்தில் அவர்களை பணியில் அமர்த்திடவும் வழிவகை செய்யப்பட்டு வருவதால் இக்குறுகிய கால பயிற்சி சமுதாயத்தில் நல்ல வரவேற்பினைப் பெற்றுள்ளது.

இக்குறுகிய கால தொழிற் பயிற்சி சமுதாயத்தில் பெற்றுள்ள வரவேற்பு மற்றும் வெற்றியின் அடிப்படையில் ஆணையர் அவர்களின் ஒப்புதல் பெற்று தென் சென்னை பகுதி, அருணாச்சலம் தெருவில் உள்ள சமுதாயக் கல்லூரியில் 3 பாடப் பிரிவுகளில் குறுகிய கால பயிற்சி தொடர்ந்து ஜுன் 2008 முதல் 2 ஆண்டுகள் நடத்தவும், மேலும், வடசென்னை பகுதி நாட்டுப்பிள்ளையார் கோயில் தெருவில் உள்ள சமுதாயக் கல்லூரியில், 1)B.P.O 2)Information Technology Enabled Services (ITES) 3) Electrical Technician 4) Cutting and Tailoring ஆகிய 4 புதிய பாடப் பிரிவுகளில் 3 மாத குறுகிய கால பயிற்சி ஜுன் 2008 முதல் 2 ஆண்டுகள் நடத்தவும் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

நாளிதழில் கொடுக்கப்பட்ட விளம்பரத்தின் அடிப்படையில் 2 நிறுவனங்களிலிருந்து விண்ணப்பங்கள் பெறப்பட்டு விலைப்புள்ளி விவரங்கள் கீழ்க்கண்டவாறு கொடுக்கப்பட்டுள்ளன.

**Comparative Statement - I South Campus (Arunachalam St)**

| S I. N o | Courses | Rate quoted by the Institutions per Batch of 40 aspirants | | Lowest rate by M/s Dr.Reddy's Foundation | Total amount for 3 batches per years (120 students /per batch) | Remarks |
|---|---|---|---|---|---|---|
| | | Dr. Reddy's Foundation | ARKN Institution | | | |
| 1 | BPO | 88,000 | 2,00,000 | 88,000 | 88,000 X 3= 2,64,000 | |
| 2 | Customer Relations & Sales | 88,000 | 2,00,000 | 88,000 | 88,000 X 3= 2,64,000 | |
| 3 | Hospitality Services | 88,000 | 2,40,000 | 88,000 | 88,000 X 3= 2,64,000 | |
| | Total amount for3 courses per year | 2,64,000 | 6,40,000 | 2,64,000 | **7,92,000**. | |

**க.து.ந.க.எண்.டி1/008/2008**

மேற்கண்ட விலைப்புள்ளி பட்டியல் – **I** ல் Dr. Reddy's Foundation என்ற நிறுவனம் வரிசை எண் **1** முதல் **3** வரை உள்ள பாடப் பிரிவுகளுக்கு வருடத்திற்கு **360** மாணவர்களுக்கு குறைந்தளவு விலைப்புள்ளியாக ரூ.**7,92,000/–** (ரூபாய் ஏழு இலட்சத்து தொண்ணூற்று இரண்டாயிரம் மட்டும்) செலவீனத்தைக் குறிப்பிட்டுள்ளனர்

**Comparative Statement - I I North Campus (Nattupillaiyar Koil St)**

| Sl. No | Courses | Rate quoted by the Institutions per Batch of 30 aspirants | | Lowest rate by M/s Dr.Reddy's Foundation | Total amount for 3 batches per years (120 students /per batch) | Remarks |
|---|---|---|---|---|---|---|
| | | Dr. Reddy's Foundation | ARKN Institution | | | |
| 1 | BPO | 66,000 | 1,50,000 | 66,000 | 66,000 X 3= **1,98,000** | |
| 2 | Information Technology Enabled Services (ITES) | 81,000 | 1,50,000 | 81,000 | 81,000 X 3= **2,43,000** | |
| 3 | Electrical Technician | 93,000 | 1,20,000 | 93,000 | 93,000 X 3= **2,79,000** | Curriculum not submitted by ARKN Institution |
| 4 | Cutting & Tailoring | 84,000 | 1,20,000 | 84,000 | 84,000 X 3 = **2,52,000** | |
| | Total amount for 4 courses per year | 3,24,000 | 5,40,000 | 3,24,000 | 9,72,000 | |

மேற்கண்ட விலைப்புள்ளி பட்டியல் – **II** ல் Dr. Reddy's Foundation என்ற நிறுவனம் வரிசை எண் **1** முதல்**4** வரை உள்ள பாடப் பிரிவுகளுக்கு வருடத்திற்கு **360** மாணவர்களுக்கு குறைந்தளவு விலைப்புள்ளியாக ரூ.**9,72,000/–** (ரூபாய் ஒன்பது இலட்சத்து எழுபத்திரெண்டாயிரம் மட்டும்) செலவீனத்தைக் குறிப்பிட்டுள்ளனர்.

மேலும் Dr. Reddy's Foundation சமர்ப்பித்துள்ள ஆவணங்களிலிருந்து மாணவர்களுக்கான வாழ்க்கைத் திறன் மற்றும் தொழில் சார்ந்த திறன் வளர்ச்சிக்கான பயிற்சி அளிப்பதில் அந்நிறுவனத்திற்கு உள்ள விரிந்த அனுபவம் மற்றும் பிற தொழிற் நிறுவனங்களுடனான தொடர்பின் மூலம் பயிற்சியாளர்களுக்கு நிச்சயமாக வேலை வாய்ப்புக்கான உத்தரவாதமும் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.
எனவே Dr. Reddy's Foundation என்ற நிறுவனத்திற்கு,

1. இரண்டு வாளகங்களில் (தெற்கு மற்றும் வடக்கு) ஜுன் **2008** முதல் , இரண்டு ஆண்டுகள் பயிற்சி அளிக்கவும்,
2. ஓராண்டுக்கு **(2008 – 2009)** தெற்கு வளாகத்திற்கு ஆகும் செலவீனம் ரூ.**7,92,000/–** ( ரூபாய் ஏழு இலட்சத்து தொண்ணூற்று இரண்டாயிரம் மட்டும்) மற்றும் வடக்கு வளாகத்திற்கு ஆகும் செலவீனம் ரூ.**9,72,000/–** (ரூபாய் ஒன்பது இலட்சத்து எழுபத்திரெண்டாயிரம் மட்டும்) ஆக மொத்தம் இரண்டு வளாகங்களுக்கு ஆகும் மொத்த செலவீனம் ரூ. **17,64,000/–** (ரூபாய் பதினேழு இலட்சத்து அறுபத்து நான்கு ஆயிரம் மட்டும்) வழங்குவதற்கும்,
3. இச்செலவீனத்தை சென்னை மாநகராட்சி – துறை – கல்வி – பிரிவு **25** – சமுதாயக் கல்லூரி– நிர்வாக செலவுகள் திட்டம் – கணக்கு குறியீடு எண் – **369** – பல்வகை செலவுகள் என்ற தலைப்பில் வழங்குவதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>க.து.ந.க.எண்.டி1/008/2008</u>**

எனவே மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு நிலைக்குழுக்கள் ( கல்வி மற்றும் வரிவிதிப்பு மற்றும் நிதி ) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“09.06.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு(கல்வி) கூட்டத்தில் தீர்மான எண்.49/08 நாள்:09.06.2008ன்படி இப்பொருள் குறித்து ஆய்வு செய்த பின்னர் முடிவு எடுக்கலாம் என நிலைக்குழுவால் (கல்வி) தீர்மானிக்கப்பட்டு ஒத்தி வைக்கப்பட்ட இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 13.06.2008 அன்று தீர்மான எண்.58/2008–ன்படி நிலைக்குழு(கல்வி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (விரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 13.06.08 அன்று தீர்மான எண்.109ன்படி நிலைக்குழு (வ.வி.ம.நி)ன் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: க.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(து.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்.